## நாளை 11-ம் தேதி பரமக்குடியில் சிவகங்கை மாவட்ட கழகத்தின் சார்பில்

# துணை முதலமைச்சருக்கு திருப்புவனத்தில் சிறப்பான வரவேற்பு!

### அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தகவல்!

சிவகங்கை செப். 10-

சிவகங்கை மாவட்ட கழகச் செயலாளர் கூட்டுறவு துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது



நாளை 11ம் தேதி வியாழக்கிழமை பரமக்குடியில் நடைபெறும் தியாகி இமானுவேல் பேரவையின் நினைவு நாளை முன்னிட்டு அவரது நினைவிடத்தில் மரியாதை செலுத்துவதற்காக கழக இளைஞரணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வருகை தருகிறார்கள். இதற்காக மதுரையிலிருந்து கார் மூலம் வருகை தரும் துணை முதலமைச்சர் அவர்களுக்கு சரியாக காலை 8 மணிக்கு திருப்புவனத்தில் மின்வாரிய அலுவலகம் முன்பாகவும் மானாமதுரையில் புதிய பேருந்து நிலையம் முன்பாக காலை 8.30,மணிக்கும் மாவட்ட கழகச் செயலாளர் கே.ஆர். பெரியகருப்பன் எனது தலைமையில் சிறப்பான வரவேற்பு தரப்பட உள்ளது. எனவே இந்த வரவேற்பு நிகழ்ச்சியில் மாவட்ட கழக நிர்வாகிகள் ,செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள், உள்ளாட்சிபிரதிநிதிகள்,சார்பு அணி நிர்வாகிகள் கழகத் தொண்டர்கள் அனைவரும் கலந்து கொண்டு வரவேற்பு நிகழ்ச்சியினை சிறப்பித்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

---

## மதுரை வடக்கு - தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மதுரை விமான நிலையத்தில்

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு எழுச்சிமிகு வரவேற்பு!

### மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் பி.மூர்த்தி - மு.மணிமாறன் அறிக்கை!

மதுரை, செப்.10-

மதுரை வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பரமக்குடியில் நடைபெற உள்ள தியாகி இமானுவேல் சேகரனார் நினைவு தின நிகழ்வில் பங்கேற்க வருகை தரும் கழக இளைஞரணி செயலாளர் தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு மதுரை விமான நிலையத்தில் எழுச்சிமிகு வரவேற்பு கொடுக்கும் நிகழ்வில் மதுரை வடக்கு மற்றும் தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த கழகத்தினர் பெரும் திரளாக பங்கேற்குமாறு வடக்கு மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தெற்கு மாவட்டச் செயலாளர் மு.மணிமாறன் ஆகியோர் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர் அதன் விபரம்





விடுதலைப் போராட்ட வீரர், தியாகி இமானுவேல் சேகரனார் அவர்களின் 68 வது நினைவு தினம் சிவகங்கை மாவட்டம் பரமக்குடியில் உள்ள அன்னாரது நினைவிடத்தில் 11.09.2025 அன்று நடைபெறுகிறது

இந்நிகழ்வில் கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நினைவிடத்திற்கு நேரில் சென்று மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்த உள்ளார்

எனவே இந்நிகழ்வில் பங்கேற்பதற்காக சென்னையிலிருந்து விமான மூலம் மதுரைக்கு நாளை 10.09.2025 புதன்கிழமை இரவு 8.30 மணியளவில் மதுரை விமான நிலையம் வர உள்ளார். எனவே அவருக்கு மதுரை வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட திமுக சார்பில் கழகத்தினர் சிறப்பான வரவேற்பு கொடுக்கும் வகையில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கிளை செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதி நிதிகள், கழக முன்னோடிகள், கழகத்தினர் என அனைவரும் பெரும் திரளாக கையில் இருவண்ண கொடியுடன் பங்கேற்று சிறப்பிக்குமாறு மதுரை வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் மு.மணிமாறன் ஆகியோர் தமது அறிக்கையில் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

---

## நாகர்கோவில் மாநகராட்சி பகுதிகளில்

# ரூ.91 இலட்சம் மதிப்பீட்டில் வளர்ச்சித் திட்டப் பணிகள் துவக்கம்!

### மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ.மகேஷ் துவக்கி வைத்தார்!

கன்னியாகுமரி, செப்.10-

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சி, 11 வது வார்டுக்குட்பட்ட மேல கலுங்கடி பகுதியில் ரூ. 4.00 இலட்சம் மதிப்பீட்டில் அலங்கார தரைகற்கள் மறுசீரமைக்கும் பணி, 14 வது வார்டுக்குட்பட்ட மாநகராட்சி அலுவலகம் முதல் டவர் ஜங்ஷன் வரை மற்றும் டவர் ஜங்ஷன் முதல் W.C.C. சாலை வரை உள்ள பகுதியில் ரூ. 63.00 இலட்சம் மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் சீரமைப்பு மற்றும் நடைபாதை அமைக்கும் பணி, 23வது வார்டுக்குட்பட்ட லூயிஸ் அம்மாள் தெருவில் ரூ. 3.00 இலட்சம் மதிப்பீட்டில் கான்கிரீட் தளம் அமைக்கும் பணி மற்றும் 33வது வார்டுக்குட்பட்ட சாய் நகர் பகுதியில் ரூ. 21.00 இலட்சம் மதிப்பீட்டில் தார்ச்சாலை அமைக்கும் பணி ஆகிய பணிகளை கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் துவக்கி வைத்தார்.

நிகழ்வில் நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா, துணை மேயர் ம.மேரி பிரின்சி லதா, மண்டலத் தலைவர் இ.ஜவஹர், உதவி பொறியாளர் ராஜசீலி, இளநிலை பொறியாளர் ராஜா, மாமன்ற உறுப்பினர்கள் நெ.கலாராணி, விஜிலா ஜஸ்டஸ், மு.ரீலிஜா, வீரசூர பெருமாள், தி.மு.க. மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த், பகுதி செயலாளர்கள் த.ஜீவா, மு.சேக்மீரான் மற்றும் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், பொது மக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

# சென்னை அஜீத் சரவணன் இல்ல விழா!

சென்னை செப்.10-

கழகத் தலைவர், முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் நல்லாசியுடன் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் நல்வாழ்த்துக்களுடன், சென்னை கிழக்கு மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் ஆ.அஜித் சரவணன்-ச.சாவித்திரி ஆகியோரின் மகள் தே.லூர்து டாப்பினி-கா.பிரின்ஸ் மேன்லல் ஆகியோரின் திருமண வரவேற்பு விழா 11.9.2025 வியாழக்கிழமை மாலை 6 மணி அளவில் பி.கே.என். ஆடிட்டோரியம் வேப்பேரியில் நடைபெறுகிறது.

இம்மணவிழா வரவேற்பில் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர், இந்து சமய மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு பங்கேற்று வாழ்த்துரை வழங்குகிறார்.

---

## தி. மு. க. தொழிலாளர் அணி

### மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்

**தி.மு.க. தொழிலாளர் அணிச் செயலாளர் பிடிசி ஜி.செல்வராஜ் அறிவிப்பு**

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி, மாவட்டப் பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. தொழிலாளர் அணியின் திருநெல்வேலி மத்திய மாவட்டம் - திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி மேற்கு மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**திருநெல்வேலி மத்திய மாவட்டம்**

**திருநெல்வேலி கிழக்கு மாநகரம்**

அமைப்பாளர் - எஸ். கந்தன் 7/190, சீவலப்பேரி ரோடு, பாளையங்கோட்டை, திருநெல்வேலி.

துணை அமைப்பாளர்கள் - 1) முஹைதுன் அப்துல் காதர் 8/376, ஆசாத் தெரு, எம்.கே.பி. நகர், பாளையங்கோட்டை, திருநெல்வேலி. 2) ஆரோன் தாஸ் நல்வழி தெரு, சமாதானபுரம், பாளையங்கோட்டை, திருநெல்வேலி. 3) சங்கர் சிவன் கோவில் தெரு, பாளையங்கோட்டை, திருநெல்வேலி. 4) கே. முருகன் 25-2, 4வது தெரு, ராஜா நகர், மேலப்பாளையம் - 627005, திருநெல்வேலி.

**திருநெல்வேலி மேற்கு மாநகரம்**

அமைப்பாளர் - சி. வேலாயுதம் (எ) சரவணன் சிவா தெரு, திருநெல்வேலி டவுன். துணை அமைப்பாளர்கள - 1) பேச்சிமுத்து 79, முத்துராமலிங்கபுரம், திருநெல்வேலி டவுன் - 627006. 2) என். காஜாமைதீன் 13ஏ, ஆர்.பி. மேல புதுமனை தெரு, பேட்டை, திருநெல்வேலி - 627004. 3) ஈஸ்வரன் 29, செண்பகம் பிள்ளை தெரு, திருநெல்வேலி டவுன் - 627006. 4) பரமசிவன் ஆதித்திராவிடர் வடக்கு தெரு, சத்திரம் புதுக்குளம், தச்சநல்லூர், திருநெல்வேலி.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18.
நாள் : 08-09-2025.

**பிடிசி ஜி.செல்வராஜ்**
செயலாளர்,
**தி.மு.க. தொழிலாளர் அணி**

---

## தி.மு.க. தொண்டர் அணி

### மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் மற்றும் மாவட்ட அமைப்பாளர் நியமனம்

**தி.மு.க. தொண்டர் அணிச் செயலாளர் பெ. சேகர் அறிவிப்பு**

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. தொண்டர் அணியின் விருதுநகர் வடக்கு மாவட்டம், சிவகாசி மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் மற்றும் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட அமைப்பாளர் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**விருதுநகர் வடக்கு மாவட்டம்**

**சிவகாசி மாநகரம்**

தலைவர் - ஆர். செந்தில்குமார் 372, முருகன் காலனி, பள்ளப்பட்டி ரோடு, திருத்தங்கல், விருதுநகர் மாவட்டம்.

துணைத் தலைவர் - ஆர். குருசாமி 35, மருதுபாண்டியன் மேட்டுத் தெரு, சிவகாசி, விருதுநகர் மாவட்டம்.

அமைப்பாளர் - ஜி.ஜி. முருகன் 1/2சி, ஆலாவூரணி அண்ணா காலனி, திருத்தங்கல், விருதுநகர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) தா. ஸ்டீபன் செல்லதுரை 16, எம்.ஜி.ஆர். காலனி, திருத்தங்கல், விருதுநகர் மாவட்டம். 2) க. மாரிச்செல்வம் 666, காமராஜர் ரோடு, அறிஞர் அண்ணா காலனி 10வது தெரு, சிவகாசி, விருதுநகர் மாவட்டம். 3) வி. மருதுபாண்டியன் 36எ, பெரியார் காலனி, ஆலமரத்துப்பட்டி ரோடு, திருத்தங்கல், விருதுநகர் மாவட்டம். 4) ஆர். முத்துக்குமார் 467, காமராஜர் ரோடு, சிவகாசி, விருதுநகர் மாவட்டம். 5) க. முருகன் 30/30, கண்ணகி காலனி, தொகுப்பு வீடு, திருத்தங்கல், விருதுநகர் மாவட்டம்.

**கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம்**

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் வேலுமணி அவர்கள், நகரக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டதால், அவரை அமைப்பாளர் பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக **கே.பிரபுகிருஷ்ணா** (மிட்டப்பள்ளி, பாலிநாயனப்பள்ளி, பர்கூர் வடக்கு, கிருஷ்ணகிரி மாவட்டம்) அவர்கள் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18.
நாள் : 08-09-2025.

**மாஸ்டர் பெ. சேகர்**
செயலாளர்,
**தி.மு.க. தொண்டர் அணி**

---

# அந்த 7 நாட்கள்!



அந்த 7 நாட்கள்!
வாரத்தில் வரும் நாட்கள்அல்ல;
வரலாறு படைத்த நாட்கள்!
“திரைகடலோடியும் திரவியம் தேடு”
என்று அவ்வை சொன்னது,
தனிமனிதனுக்கு மட்டுமல்ல;
ஆட்சியில் இருப்பவர்களுக்கும் தான்
என்று முடிவெடுத்து,
ஜெர்மன் நாட்டிற்கும், இங்கிலாந்து நாட்டிற்கும்,
திரவியம் திரட்டச் சென்றுவந்தார்
நம் முதல்வர் தளபதியார்!

ஜெர்மன்!
ஒருகாலத்தில்உலகையே
ஒருகுடையின்கீழ் கொண்டுவரவேண்டும்
என்ற பேராசையால்
உலகையே கிடுகிடுக்கவைத்த
ஹிட்லர் வாழ்ந்த பூமி ஜெர்மன்!
இரண்டாவது உலகப்போருக்குப்பின்
நாடு நிலைகுலைந்துபோனது!
முடங்கிப் போன தொழில்கள்;
வறுமையால் வதங்கிப் போன மக்கள்;
நாடே இரண்டானது!
கிழக்கு மேற்கு என்றிருந்த நாடு இன்று
தொழில்துறை; கல்வித்துறை;
உணவுத்துறை போன்றவற்றில்
உலகநாடுகளோடு போட்டிபோட்டு நிற்கிறது!

இலண்டன்!
இங்கிலாந்து நாட்டின் தலைநகர் இலண்டன்!
“மூர்த்தி சிறிது என்றாலும் கீர்த்தி பெரிது”
என்ற பழமொழி
இங்கிலாந்து நாட்டிற்குத் தான் பொருந்தும்!
யுத்தத்திலிருந்து உலகைக்
காப்பாற்றியது லண்டன்!
எல்லாவற்றிற்கும் மேலாக,
நம்மை 250 ஆண்டுகளுக்கும்
மேலாக ஆண்ட நாடு!
எனினும், ஜனநாயகம்
பழுதுபடாமல் இருக்கிறது!
அதனால் அந்த நாட்டு அமைச்சரோடு
நம் தலைவர் தளபதி சரியாசனத்தில்
அமர்ந்து உரையாடியிருக்கிறார்!

ஜெர்மன், இங்கிலாந்து
இந்த இரு பெரும் நாடுகளில்
நம் முதல்வர் தளபதியார் திரட்டிவந்த
தொழில்துறைமுதலீடுகள் 15,516கோடி!
இந்த முதலீடுகள் தொழிற்சாலைகளாக
இங்கேஉருமாறி நிற்கும் போது
17,613 நபர்களுக்கு
வேலைவாய்ப்பு கிடைக்கும் என்கிறார்கள்!
இத்தனை வெற்றிகளையும் தளபதிபெற்றது
அந்த ஏழு நாட்களில்தான்!
அடுத்து,
தமிழனாக!
தமிழ்த் தலைவராக!
தமிழ்நாட்டின் முதல்வராக!
தன்மானச் சுடராக!
சுயமரியாதைக் கொள்கைக்காரனாக!
எல்லாவற்றிற்கும் மேலாக
தலைவர் கலைஞரின் மகனாகநின்று
வரலாற்றுநிகழ்வை நடத்தியிருக்கிறார்
தளபதி அவர்கள்!

“ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம்”
உலகப் புகழ்பெற்றது!
உலகத்தில் உள்ள பல்கலைக் கழகத்திற்குத்
தாயானது!
உலகத்தில்தோன்றியமுதல்பல்கலைக்கழகம்!
இந்தப் பல்கலைக்கழகம்
எப்போது எவ்வாறு தோன்றியது
என்று யாருக்கும் தெரியாதாம்!
ஆனால், கற்பிக்கத் தொடங்கியது
1096 ஆம் ஆண்டாம்!
ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில்
உரையாற்றுவது என்பதும்,
அங்கே பெரியார் படத்தைத் திறப்பது என்பதும்,
சாதாரண நிகழ்ச்சி அல்ல
என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்!
உலகத்தில் தலைசிறந்த
அரசியல் அறிஞர்கள்!
கல்வியில் சிறந்த மேதைகள்!
விஞ்ஞான விற்பன்னர்கள்!
விடுதலை வீரர்கள்!
புதுமைகளைக் கண்டுபிடித்தோர்
போன்றவர்கள் மட்டும்தான்
ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக
மேடையில் இடம் பெறுவார்கள்!

இதோ,
எங்கள் தலைவர் தளபதிக்கு
அந்த மேடை இடம் கொடுத்துவிட்டது!
மேடையில் ஏறியது மட்டும் அல்ல;
பெரியார் படத்தையும் திறந்து வைத்து
தளபதி உரையாற்றி இருக்கிறார்!
இந்தப் புகழ் இந்தியாவில்
ஒருவருக்கு மட்டும்தான் கிடைக்கும்
அந்தப்புகழைப்பெற்று
நாடு திரும்பி இருக்கும் தளபதியே!
எங்கள் முதல்வரே!
எங்களுக்குக் கிடைத்த
இரண்டாம் கலைஞரே!
நீர் நீடூழி வாழ்க!



**அமைச்சர் துரைமுருகன்**
**கழகப் பொதுச் செயலாளர்**

---



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சி, 11, 14, 23, 33 ஆகிய வார்டுகளில் ரூ. 91.00 இலட்சம் மதிப்பீட்டில் வளர்ச்சித் திட்டப் பணிகளை மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் துவக்கி வைத்தார். நிகழ்வில் நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா, துணை மேயர் ம.மேரி பிரின்சி லதா, மண்டலத் தலைவர் இ.ஜவஹர், ராஜசீலி, ராஜா, நெ.கலாராணி, விஜிலா ஜஸ்டஸ், மு.ரீலிஜா, வீரசூர பெருமாள், வழக்கறிஞர் ப.ஆனந்த், த.ஜீவா, மு.சேக்மீரான் மற்றும் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.